**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 48/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 10.03.2026.**

| | |
|---|---|
| **Name : அய்யனார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 2023 ம் வருடம் மாலை நேரத்தில் சந்தைப்பேட்டை அருகே நின்றிருந்த போது அடையாளம் தெரியாத வாகனத்தில் வந்த நபர்கள் என்னை தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது. பிறகு நான் மருத்துவமனைக்கு சென்றேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை எதிரிகளின் மீது இருந்த சந்தேகத்தின் பேரில் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 13.01.2023ம் தேதி மாலை 04.45 மணிக்கு ஜலகண்டாபுரம் சந்தைப்பேட்டை அருகே கரடியான் கடை முன்பு ரோட்டில் நடந்து சென்ற போது TN 93 E 9857 bolero pick up வாகனத்தை வினோத் என்பவர் ஓட்டி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. வினோத் மற்றும் மனோகரன், சிவகுமார் வண்டியிலிருந்து கீழே இறங்கி என்னை கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் இல்லை. வினோத் கையால் என் முகத்தில் குத்தினார் என்றால் இல்லை. மனோகர் மற்றும் சிவகுமார் என்னை கீழே தள்ளி காலால் எட்டி உதைத்தனர் என்றால் இல்லை. வினோத் அருகில் கிடந்த கல்லை எடுத்து என் காலின் மீது போட்டு வண்டியுடன் சென்றுவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:24:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 48/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 10.03.2026.**

| | |
|---|---|
| **Name : ஜெயவேல்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 2023ம் வருடம் மாலை நேரத்தில் சந்தைப்பேட்டை அருகே அ.சா.1 நின்றிருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 13.01.2023ம் தேதி மாலை 04.45 மணிக்கு ஜலகண்டாபுரம் சந்தைப்பேட்டை அருகே கரடியான் கடை முன்பு ரோட்டில் அ.சா.1 நடந்து சென்ற போது TN 93 E 9857 bolero pick up வாகனத்தை வினோத் என்பவர் ஓட்டி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. வினோத் மற்றும் மனோகரன், சிவகுமார் வண்டியிலிருந்து கீழே இறங்கி அ.சா.1 கெட்ட வார்த்தையால் பேசினார்களா என்றால் இல்லை. வினோத் கையால் அ.சா.1 முகத்தில் குத்தினார் என்றால்

இல்லை. மனோகர் மற்றும் சிவகுமார் அ.சா.1 கீழே தள்ளி காலால் எட்டி உதைத்தனர் என்றால் இல்லை. வினோத் அருகில் கிடந்த கல்லை எடுத்து அ.சா.1 காலின் மீது போட்டு வண்டியுடன் சென்றுவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:24:14 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 48/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 10.03.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஓட்டல் கடை வைத்துள்ளேன். வேலை செய்கிறேன். கடந்த 2023 ம் வருடம் மாலை நேரத்தில் சந்தைப்பேட்டை அருகே அ.சா.1 நின்றிருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 14.01.2023 ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் மற்றும் சிவலிங்கம் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த

வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான ஜலகண்டாபுரம் சந்தை பேட்டை அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.01.2023 ம் தேதி மாலை 6.50 மணிக்கு நான் மற்றும் சிவலிங்கம் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் கைக்கு அடக்கமான கருங்கல் ஒன்று கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான ஜலகண்டாபுரம் சந்தை பேட்டை அருகே கைக்கு அடக்கமான கருங்கல் கைப்பற்றிய போது தயார் செய்த மகஜரில் சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:24:21 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 48/2024**

**Prosecution witness : அ.சா.4** **Date : 10.03.2026.**

| | |
|---|---|
| **Name : மோகன்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் ஆய்வு செய்த புலனாய்வு அதிகாரி திரு.ராஜன், காவல் உதவி ஆய்வாளர் தக்க சமயத்தில் சாட்சியம் அளிக்க இயலாத காரணத்தால் அவர் சார்பாக ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 14.01.2023–ம் தேதி ஜலகண்டாபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் ராஜன் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் செல்லப்பன் என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த அய்யனார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.16/2023 u/Sec. 294(பி), 323, 324 IPC** ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 5** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 04.08.2016 ம் தேதி காலை 9 மணிக்கு சம்பவ இடம் ஜலகண்டாபுரம் ஆவடத்தூர் குழந்தைநகர், மாதையன் வீட்டருகில் சென்று

சாட்சிகள் ராஜா மற்றும் சிவலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 6** மற்றும் **அ.சா.ஆ 7** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் அய்யனார், ராஜி, ஜெகநாதன், ஜெயவேல், சிவலிங்கம், ராஜா, மருத்துவர் வினோத்குமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் செல்லப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த அய்யனார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வினோத்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும். இவ்வழக்கில் எதிரி சிவகுமார் என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து எதிரி நீக்கல் அறிக்கை வாயிலாக நீக்கப்பட்டார். எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ–9** ஆகும். இவ்வழக்கில் கடந்த 14.01.2023 ம் தேதி மாலை 06.50 மணிக்கு கரடியார் கடை முன்பு கைக்கு அடக்கமான ஒழுங்கற்ற நிலையில் உள்ள கருங்கல் ஒன்று கைப்பற்றப்பட்டு சாட்சிகள் சிவலிங்கம் மற்றும் ராஜா முன்னிலையில் மகஜர் தயார் செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.10,** படிவம் 95 **அ.சா.ஆ.11** ஆகும். கைக்கு அடக்கமான கருங்கல் **சா.பொ.1** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரி கடந்த 28.01.2023 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 25.04.2023 ம் தேதி **நி.கு.எண்.16/2023 u/Sec. 294(பி), 323, 324 IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட

வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.10 17:24:26 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**